மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

2. அறிவிப்புகள்.

(அ) தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்.

பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலை கழகப் பேரவையில் (செனட்) ஏற்பட்டுள்ள இரண்டு வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி பகுதிவாரி அடிப்படையில் (Proportional representation) இத்தேர்வு நடைபெறுவதில்லை.

எனவே வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 8-9-1982 புதன்கிழமை மாலை 3.00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 9-9-1982 வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 10-9-1982 வெள்ளிக் கிழமை மாலை 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது இரண்டு இடங்களுக்கு மேற்படுமாயின் 11-9-1982 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்குமிடையே, சென்னை கோட்டையிலிருக்கும் பேரவை குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)-ன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை, இப்பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairman) நியமிக்கிறேன்:

1. திரு. க. பாலசுப்பிரமணியம்
2. திரு. ஆர். டி. கோபாலன்
3. திரு. ப. பொன்னுரங்கம்
4. திருமதி தா. இராசாம்பாள்
5. திரு. கு. ரமணி